DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.
CC.No.116/2021
Prosecution witness – P.W.4

| | | |
|---|---|---|
| Name | : திரு.சதீஸ்குமார் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused present)
**25.05.2026-04.00 PM**
<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது கமுதி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளர் பணிபுரிந்து வருகிறேன். நிலையத்தில் பணிபுரிந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திருமதி.சத்யா மற்றும் ஆய்வாளர் திரு. அன்பு பிரகாஷ் ஆகியோருடன் நான் பணியாற்றி உள்ளேன். அந்த வகையில் அவர்களது கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சயம். மேற்படி சார்பு ஆய்வாளர் மற்றும் ஆய்வாளர் பணிமாறுதல் காரணமாக சென்றுவிட்டதால் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை. அவர்கள் சார்பாக ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. மேற்படி சார்பு ஆய்வாளர் கடந்த 22.04.2021ம் தேதியன்று 17.00 மணிக்கு நிலையப் பொறுப்பில் இருந்தபோது கமுதி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற intimation பெற்று உடனடினயாக மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த திருக்கண்ணன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று நிலையக் குற்ற எண்.263/2021 சட்டப்பிரிவுகள் 279, 337-ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பின்னர் அன்றே தினமே 18.35 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பாலசுப்பிரமணியன் மற்றும் முனியசாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.5** ஆகவும், அந்த **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

4. பின்னர் சம்பவ சாட்சிகளான பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலான சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5. இவ்வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட வள்ளி சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி 22.04.2021ம் தேதி இறந்துவிட்டதாக தகவல் கிடைத்ததால் வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337–என்பதிலிருந்து சட்டப்பிரிவுகள் 279, 337, 304(A)–ஆக பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். அந்த **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. பின்னர் சம்பவ இட சாட்சிய விசாரணையிலும் எனது இரகசிய விசாரணையிலும் எதிரி குற்றச் சம்பவத்தில் ஈடுபட்டது உண்மையென தெரியவந்ததால் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரியை தேடிவந்த நிலையில் 09.06.2021ம் தேதி 11.00 மணிக்கு கமுதி கண்ணார்பட்டி ரோட்டில் வைத்து கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

7. பின்னர் வழக்கின் கோப்பை புலன் விசாரணைக்காக ஆய்வாளர் திருமதி.சத்தியா அவர்கள் வசம் ஒப்படைத்துள்ளார். அவர் வழக்கு கோப்பை பார்வையிட்டு தனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு இறந்து போன வள்ளி என்பவரது பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் 23.04.2021ம் தேதி பிரேத விசாரணை மேற்கொண்டு அறிக்கை தயார் செய்துள்ளார். அந்த **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே மருத்துவர்களுக்கு காவலர் திரு.மகேஸ்வரன் மூலம் சிவகங்கை மருத்துவருக்கு இறந்து போன வள்ளி என்பவரது பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதம் அளிக்கப்பட்டது. .

8. விபத்து ஏற்படுத்திய வாகனமான TN 65 BZ 8013 மற்றும் விபத்திற்குள்ளான TN 65 AU 2950 என்ற பதிவு எண் கொண்ட இரண்டு வாகனத்தையும் பரமக்குடி மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்விற்கு உட்படுத்தி அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை 05.05.2021ம் தேதி பெற்றுள்ளார். அந்த **மோட்டார் வாகன**

**ஆய்வறிக்கை முறையே அ.சா.ஆ.9 மற்றும் அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. பின்னர் பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் கமுதி அரசு மருத்துவர் எழிலரசி என்பவரை விசாரித்து வாக்மூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றுள்ளார். அந்த **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.11** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் பிரேத பரிசோதனை நிமித்தம் பணிக்காக அனுப்பி வைக்கப்பட்ட காவலர் திரு.மகேஸ்வரன் அவர்களையும், சார்பு ஆய்வாளர் திருமதி. சத்யா அவர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அத்துடன் வழக்கின் விசாரணையை 08.07.2021ம் தேதியன்று முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279, 337, 304(A)–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

1. நான் சொல்வது போல் புகார் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும், சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல. அ.சா.1 அளித்த பொய்யான புகார் வாக்குமூலத்தை பெற்று சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை விசாரிக்காமல் காவல்நிலையத்தில் வைத்து வழக்கிற்கு ஏற்றார் போல் ஆவணங்களை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. புலன் விசாரணை அதிகாரி முறையாக மேல் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.25 18:39:28 +0530